ஆணையர் (வணிகவரிகள்)
SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA TAMIL NADU
15 MAR 2022
சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா
எழிலகம், சென்னை–600 005.

**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – திருச்சி கோட்டம் – திரு ர.வெங்கடேஷ் என்பவர் கருணையடிப்படையில் 10.02.2020 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை**

அரசாணை (டி) எண்.44

நாள்: 17.02.2022
பிலவ , மாசி–5,
திருவள்ளுவர் ஆண்டு, 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. இணை ஆணையர் (வணிகவரி), திருச்சி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8596/ 2019/ஆ2, நாள் 24.01.2020.
4. கூடுதல் ஆணையரின் (நிர்வாகம்), (வணிகவரி ஆணையர் அலுவலகம்) கடித எண். ஒய்3/ 661485/2020, நாள் 24.02.2021.

*****

ஆணை:

வணிகவரித் துறையில், திருச்சி துணை ஆணையர் (வணிகவரி) (செயலாக்கம்) அலுவலகத்தில் ஓட்டுநராகப் பணிபுரிந்த திரு க. ரமேஷ் என்பவர் 20.03.2017 அன்று பணியிடை மரணமடைந்ததால் அவரது மனைவி திருமதி. ஆர். இந்துமதி என்பவர் தனது மகன் திரு ர.வெங்கடேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 21.06.2017 மற்றும் 29.10.2018 ஆகிய நாட்களில் விண்ணப்பித்துள்ளார். திரு ர.வெங்கடேஷ், இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, கூர்ந்தாய்வு செய்து தனியர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் பெறத் தகுதியுடையவராக அறியப்பட்டு, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட திருச்சி கோட்டம், இணை ஆணையர் (வணிகவரி) அவர்களின் செயல்முறைகளின்படி வணிகவரித் துறையின் திருச்சி கோட்டம், உதவி ஆணையர் (வணிகவரி), ஸ்ரீரங்கம் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 10.02.2020 பிற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு ர.வெங்கடேஷ் என்பவருக்கு, அவர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 10.02.2020 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), வணிகவரி ஆணையர் அலுவலகம் அவர்கள் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

2. மேற்காணும் கூடுதல் ஆணையரின் கருத்துருவைப் பரிசீலித்ததில், திரு ர.வெங்கடேஷ் என்பவர் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம்

செய்யப்படுவதற்கு தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும், தனியரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

3. எனவே, வணிகவரித் துறையில், திருச்சி துணை ஆணையர் (வணிகவரி) (செயலாக்கம்) அலுவலகத்தில் ஓட்டுநராகப் பணிபுரிந்தபோது 20.03.2017 அன்று பணியிடை மரணமடைந்த திரு க. ரமேஷ் என்பவரது மகன் திரு ர.வெங்கடேஷ் என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், திருச்சி கோட்டம், உதவி ஆணையர் (வணிகவரி), ஸ்ரீரங்கம் அலுவலகத்தில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 10.02.2020 பிற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத்தொகை ஏதேனும் இருப்பின் அதனைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.1917/ட்டி–1/2021, நாள் 02.02.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.3696/ஜி.1/2022–1, நாள் 08.02.2022 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

<u>பெறுநர்:</u>

திரு ர.வெங்கடேஷ், இளநிலை உதவியாளர்,
உதவி ஆணையர் (வணிகவரி) அலுவலகம், ஸ்ரீரங்கம், திருச்சி கோட்டம்.
(கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக).
கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக)

<u>நகல்:</u>

இணை ஆணையர் (வணிகவரி), திருச்சி கோட்டம்.
(கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5 வழியாக).
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை – 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2/3/2022
பிரிவு அலுவலர்

2/3/2022